தொடங்குவதற்கு, சுயநிதிக் கல்லூரிகள் தொடங்குவதற்குச் சில நிபந்தனைகளுடன் அரசு அனுமதியளித்து வருகிறது. அவ்வாறான கருத்துரு ஏதும் அப்பகுதியிலிருந்து வருமேயானால், அது முறைப்படி பரிசீலிக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சுயநிதிக் கல்லூரிகள் தொடங்குவதற்கு முன்வந்தால் அரசு அனுமதி அளிக்குமா என்று நான் கேட்க எண்ணியதை அறிந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கேயிருந்து ஏதாவது தகவல் வந்தால் அது பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒரு வேளை அங்கே இருக்கின்றவர்கள்—என்னுடைய தொகுதியைச் சார்ந்தவர்கள்—ஏதாவது முயற்சிகள் மேற்கொண்டால் அரசு உடனடியாக அதைக் கொடுப்பதற்கு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, உறுப்பினர் அவர்கள் தகவல் வந்தால் செய்யப்படுமா என்று கேட்டார்கள். தகவல் வந்தால் செய்ய முடியாது. முறைப்படியான விண்ணப்பங்கள் வரப்பெற்றால் அவை உரிய முறையிலே பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் பேரவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது. வினா எண் 18, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் (குறுக்கீடு) அடுத்த கேள்வி திரு. ஜி. பழனிசாமி, அவை நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கவேண்டும்.

18—

பேரணாம்பட்டு அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைக்கு கட்டிடம் கட்டுதல்

35710—டாக்டர் ஜெ. பரந்தாமன்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1994 நவம்பர் 4]

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டு அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைக்குச் சொந்த கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இது பற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிரம நிலையில் இருக்கிற வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம் உட்பட, சில மாவட்டங்களில் 15 மூடிக் கிடக்கும் தோல் மற்றும் பீடித் தொழிற்சாலைகளைச் சார்ந்த 11,131 தொழிலாளர்களுக்கு தீபாவளிப் பண்டிகை கொண்டாடுவதற்கு 44 லட்சத்து 52 ஆயிரத்து 400 ரூபாயை கருணை நிதியாக அள்ளித்தந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் ஒரே காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைக் காணிக்கையாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). பேரணாம்பட்டில் 50--க்கும் மேற்பட்ட தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலும், 70 பீடித் தொழிற்சாலைகளிலும் சுமார் 3 ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். எனவே, அவர்களுக்கு மருத்துவ வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்றால், நிதி நிலையும் மற்றும் சூழ்நிலையும் சாதகமாக இருக்கின்ற சூழ்நிலையில், கட்டிட வாடகையை சேமிக்க முடியும் என்பதால், கடடிடம் கட்டித் தர மத்திய அரசுக்கு செயல் வேகம் மிக்க, விவேகம் மிக்க டாக்டர் புரட்சித் தலைவி அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி புரட்சித் தலைவி அவர்களினுடைய அரசு பரிசீலனை செய்யும் எனபதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையும், பீடித் தொழிலாளர் மருத்துவமனையும் மத்திய அரசின் பொறுப்பில் உள்ளதால், பீடித் தொழிலாளர் மருத்துவமனை இல்லாத பேரணாம்பட்டில் சுமார் 12 ஆயிரம் பீடித் தொழிலாளர்கள் பயனடைவார்கள் என்பதால்

பேரணாம்பட்டு பீடித் தொழிலாளர்கள், பேரணாம்பட்டு ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையிலேயே சிகிச்சை பெற மத்திய அரசுக்கு கருணை உள்ளம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 19, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.

19—

எமனேஸ்வரத்தில் இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஆரம்பித்தல்

33496—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, எமனேஸ்வரத்தில் இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்று ஆரம்பிக்க அரசுக்குப் பரிந்துரை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதியில் எமனேஸ்வரத்தில் இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்று ஆரம்பிக்க அரசுக்கு பரிந்துரை ஏதும் வரவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவே நாட்டுயர்வு என்ற சொல்லுக்கு இலக்கணமாக இன்றையதினம் ஆட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில், பரமக்குடி நகர் மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில் கிளை ஒன்றை ஆரம்பித்து இருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாது இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில் மகளிர் கிளை ஒன்றையும் பரமக்குடி நகரில் ஆரம்பித்து இருக்கிறார்கள்.